# ஜாலான் ரஹ்மாட் கோயிலுக்கு எதிராக

# 30 பேரடங்கிய குழு ஆட்சேபம்




கோலாலம்பூர், ஏப். 12 - கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகத்தின் (டிபிகேஎல்) அனுமதியின்றி, ஒரு தற்காலிக இந்துக் கோயில், கோலாலம்பூரின் ஜாலான் ஈப்போவுக்கு அருகிலுள்ள ஜாலான் ரஹ்மாட்டில் கட்டப்பட்டிருப்பதாக, ஊராட்சிமன்றம் நேற்று தெரிவித்தது.

அக்கோயில் கட்டப்பட்டுள்ள நிலம் தனியாருக்குச் சொந்தமானதாக இருக்கும் வேளையில், அக்கோயில் கட்டப்படுவதற்கு எதிராக பல நோட்டீஸ்கள் வெளியிட்டிருப்பதாகவும் பணியை நிறுத்தும் உத்தரவும் அதில் அடங்கும் என்றும் டிபிகேஎல் தெரிவித்தது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், அக்கோயிலைக் கட்டும் பணி நிறுத்தப்பட்டிருப்பதைக் காண முடிந்தது.

"இம்மாதம் 7ஆம் தேதி நில உரிமையாளருடன் சந்திப்பு நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அக்கோயில் அங்கு தற்காலிகமாகத்தான் இருக்கும் என்றும் அந்நிலத்தில் ஒரு வர்த்தக காம்ப்ளெக்ஸ் கட்டப்படும் என்றும் எங்களிடம் தெரிவிக்கப்பட்டது.

"இந்த தற்காலிக கோயிலானது அந்த நில உரிமையாளரின் தனிப்பட்ட பயனீட்டுக்கானது என்றும் பொதுமக்களுக்கானது அல்ல என்றும் கூறப்பட்டது" என்று நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்ட ஓர் அறிக்கையில் டிபிகேஎல் கூறியது.

இதன் தொடர்பில், முஸ்லிம் மதப் போதகர்களான ஃபிர்டுவாஸ் வோங் மற்றும் ரிட்சுவான் தி அப்துல்லா தலைமையில், அக்கோயிலுக்கு முன்புறத்தில் நேற்று 30துக்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெர்கிம் தலைமையகத்தில் உள்ள சூராவுக்கு எதிர்புறத்தில் அக்கோயில் கட்டப்படுவதை அவர்கள் ஆட்சேபித்தனர்.

இதனிடையே, சிலாங்கூர், டெங்கிலில் உள்ள ஒரு பள்ளிவாசல் நிலத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஓர் இந்துக் கோயிலை அகற்றுவது தொடர்பில், சிப்பாங் நகராண்மை மன்றத்துடன் சேர்ந்து தான் பணியாற்றப் போவதாக, சிலாங்கூர் மாநில இஸ்லாமிய சமய இலாகாவான ஜாய்ஸ் தெரிவித்தது.

ஒரு பள்ளிவாசலைக் கட்டுவதற்காக அந்த 4 ஹெக்டர் நிலம் கடந்த 2011ஆம் ஆண்டில் அரசாங்கப் பதிவேட்டில் பதியப்பட்டதாக, ஜாய்ஸ் இயக்குநர் ஷாசிஹான் அஹ்மாட் கூறினார்.

அப்பள்ளிவாசலைக் கட்டும் பணி 2026ஆம் ஆண்டில் தொடங்கப்பட திட்டமிடப்பட்டிருப்பதாகவும் கடந்த 2024ஆம் ஆண்டு வரையில் அந்நிலம் காலியாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

"அக்கோயிலை அகற்றும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, கடந்த 2024ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் தேதி சிப்பாங் ஊராட்சி மன்றத்திற்கு ஜாய்ஸ் ஒரு கடிதத்தை வழங்கி இருந்தது. எனினும், அம்மன்றத்தினால் தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை" என்று ஷாசிஹான் தெரிவித்தார்.